# கேள்வி:

"எறும்புகளால், பேச முடியாது. வசனம் 19 சொல்வதாவது, சாலமன் எறும்புகள் பேசுவதை "கேட்டார்" - தயவு செய்து விளக்கு."

---

# பதில்:

மிகவும் சிறந்த கேள்வி. விஞ்ஞான கோட்பாடுகளை மீறுகிறதாய் நினைக்கும் ஒரு வசனத்தின் சந்தேகத்தை நீ தீர்த்துக்கொள்ள காட்டும் உன் ஆர்வத்தை நான் வரவேற்கின்றேன். கேட்டதற்கு நன்றி, அந்த வசனத்தை எழுதுகிறேன் :

“மேலும் ஸுலைமானுக்கு ஜின்கள் மனிதர்கள் பறவைகள் ஆகியவற்றிலிருந்து அவரது படைகள் திரட்டப்பட்டு, அவை (தனித் தனியாகப்) பிரிக்கப்பட்டுள்ளன. இறுதியாக, எறும்புகள் நிறைந்த இடத்திற்கு அவர்கள் வந்த போது ஓர் எறும்பு (மற்ற எறும்புகளை நோக்கி:) “எறும்புகளே! நீங்கள் உங்கள் புற்றுகளுக்குள் நுழைந்து கொள்ளுங்கள்; ஸுலைமானும் அவருடைய சேனைகளும், அவர்கள் அறியாதிருக்கும் நிலையில் உங்களை நசுக்கி விடாதிருக்கும் பொருட்டு (அவ்வாறு செய்யுங்கள்)“ என்று கூறிற்று. அப்போது அதன் சொல்லைக் கேட்டு, அவர் புன்னகை கொண்டு சிரித்தார். இன்னும், “என் இறைவா! நீ என் மீதும், என் பெற்றோர் மீதும் புரிந்துள்ள உன் அருட்கொடைகளுக்காக, நான் நன்றி செலுத்தவும், நீ பொருந்திக் கொள்ளும் விதத்தில் நான் நன்மைகள் செய்யவும், எனக்கு அருள் செய்வாயாக! இன்னும் உம் கிருபையைக் கொண்டு என்னை உன்னுடைய நல்லடியார்களில் சேர்த்தருள்வாயாக!” என்று பிரார்த்தித்தார். “ (அல்-குர்'ஆன் அத்தியாயம் - 27, வசனங்கள் - 17, 18 & 19)

இப்பொழுது, உன் சந்தேகத்தை தீர்க்க நான் முயற்சிக்கின்றேன் :

மக்கள் நினைப்பர் .... "என்ன விதமான தேவதைக்கதைகள் கொண்ட புத்தகம் இந்த புனித குர்'ஆன்?". இப்புத்தகம், புனித குர்'ஆன், இது எறும்புகளைப்பற்றி பேசுகிறது - எறும்புகள் அதனிடையே பேசிக்கொள்கின்றனவாம்! - இது ஒரு தேவதைக்கதை புத்தகம்" - மிகவும் விஞ்ஞானத்திற்கு புறம்பானது!!, என.

மனிதனுக்கு ஒத்திருக்கும் ஒரு பிராணியோ அல்லது ஒரு புழுப்போச்சியோ, எறும்பு தான் என இன்று நாம் அறியப்பட்டிருக்கின்றோம். எறும்புகள், மனிதனைப்போலவே தன் இறந்த எறும்புகளை புதைக்கின்றன.

அவைகளிடம் மதிநுட்பமான, அதிநவீன வேலைப்பிரிவுகளுண்டு. அவர்களிடம், மேலாளர் (Manager), மேற்பார்வையாளர் (Supervisor), பணியாளர் (Worker) என பிரிவுகள் உண்டு. அவை சில நேரம் குழுவாக சேர்ந்து உரையாடும். அவைகளிடம் வியக்கத்தக்க, நுட்பமான செய்தித்தொடர்பு முறை உண்டு. பண்டம் மாற்றிக்கொள்ள அவர்களுக்கு வர்த்தக சந்தையும் உண்டு. பனிக்காலத்தில் அவை சேகரிக்கும் தானியங்கள் முளைக்க ஆரம்பித்தால், தானியங்கள் அழுகிவிடக்கூடும் என அறிந்து முளைக்கும் அம்மொட்டுக்களை எறும்புகள் வெட்டிவிடும். மழைக்காலத்தில் தானியங்கள் நனைந்து விட்டால், வெயிலில் காயப்போட அவை தம் பொந்துகளிலிருந்து வெளிக்கொணறும். ஏதோ ஈரம் தானியங்கள் வேர்விட்டு வளர்வதையும் அதனால் தானியங்கள் அழுகிப்போவதையும் அவை அறிந்திருப்பது போல், எறும்புகள் அவ்வாறு தானியங்களை வெளியே கொண்டு வந்து காய வைப்பதை நிச்சயமாக பார்த்திருப்பாய். ஆக, 1400 வருடங்கள் முன்பே எறும்புகளின் நுட்பமான அறிவைப்பற்றி அல்-குர்'ஆன் கூறியிருக்கிறது.

எறும்புகளைப்பற்றியும் அவைகளின் குடியிருப்பு மற்றும் தொடர்பு கொள்ளும் செயல்முறைகளைப்பற்றியும் மேலும் நிறைய அறிந்து கொள்ள, “The Ants” by Bert Holldobler and Edward O Wilson, Cambridge, Massachussets, Belknap Press of Harvard University, 1990 என்ற புத்தகத்தை பார்ர்க்கவும்.

எறும்புகள், ஆங்கிலத்திலோ, கிரேக்க மொழியிலோ அல்லது அரேபிய மொழியிலோ அல்லது அந்நேரம் மனிதனின் புழுக்கத்திலிருந்த வேறு எந்த பொழியிலும் பேசவில்லை. பலர் கருதுவது போல், அவைகள் சாலமனுடனும் (சுலைமான் அலைஹிஸ்ஸலாம்) பேசவில்லை. எறும்புகள் அவைகளுக்குள்ளேயே பேசிக்கொண்டன என்றால், அவைகள் புரிந்து கொள்ளும் தன் தனிப்பட்ட முறையிலேயே பேசிக்கொண்டன என்று தான் அர்த்தம். அந்த முறை நுகரக்கூடியதாகவோ, மெல்லிய ஓசையாகவோ, தன் அங்கங்ளின் வளைவினாலே, அல்லது எறும்புகளின் நடனம் எனப்படும் முறையினாலோ இருந்திருக்கலாம், ஆனால், அவை பேசத்தான் செய்தன.

சாலமன் (சுலைமான் அலைஹிஸ்ஸலாம்) அல்லாஹ்வினால் அக்காலத்திற்கு, அனைவருக்காக நியமிக்கப்பட்ட இறை தூதராக இருந்ததினால், அவைகளின் செய்தித்தொடர்பு, கருத்துப்பரிமாற்றம், அவருக்கு தெரிவிக்கப்பட்டது. அக்காலத்திற்கு முன்பும் பின்பும் மக்களில் யாருக்கும் கொடுக்கப்படாத அரசாட்சியும் அதிகாரமும் அல்லாஹ் சாலமனுக்கு (சுலைமான் அலஹிஸ்ஸலாம்) அளித்திருந்தான். அதாவது,

அவருக்கு காற்றின் மீதும், அவர் மக்கள் மீதும், ஜின்களின் (Janie) மீதும், அனைத்து மிருகங்கள், பறவைகள் மீதும் அவருடைய அதிகாரம் இருந்தது. ஆகவே, மிருகங்களுடனும், பறவைகளுடனும் உரையாற்றும் அறிவுத்திறன் அவருக்கு இருந்தது.

இக்கருத்துப்படிவத்தை நன்கு புரிந்து கொள்ள, நீயும் ஒரு காக்கையின் குரலுக்கு ஒப்ப கூவினால், மற்ற காக்கைகள் ஒன்று கூடி, ஏதோ புரிந்து கொண்டது போல் உன் குரலை உன்னிப்பாக கவனிப்பதை அறியலாம். ஒரு கிளியை, சில வார்த்தகள் அல்லது வரிகள் கற்பித்து, அதனுடன் நீயும் உரையாடலாம். அல்லது, கிளியின் ஓசையிலேயே நீ அதனுடன் உரையாடலாம். அப்பொழுது, கிளி உன் நனைந்த விசில் சத்தத்திலிருந்து ஏதாவது அர்த்தத்தை புரிந்து கொண்டு பதிலுக்கு அதுவும் விசிலடிக்கும். அப்படி செய்யும் பொழுது, கிளிக்கும் அதன் ஓசையில் நீ புரிந்து கொள்ளாத ஏதாவது அர்த்தம் நிச்சயம் இருக்கும்.

உன் வீட்டில் செல்லப்பிராணிகளிருந்தால், அவைகளுடன், பலவித மாறுபட்ட ஓசைகளை எழுப்பி, லயத்தை மாற்றி, அப்பிராணிகளுடன் உரையாடலாம்.

டால்ஃபின்ஸ் என்ற மீனை வளர்த்து பழக்குபவர், அதனுடன் பேசுவதை நீ பார்த்திருப்பாய். அவர்கள், தன்னுடைய மொழியிலும், உதடுகளை வளைத்து, பல வித ஓசைகளினால் மீனுடைய கவனத்தை தன் பக்கம் திருப்பிக்கொள்வதையும் பார்த்திருப்பாய்.

தேனீக்களை, வளர்த்து, அவை தன் தாடியில் தேன்கூடு கட்ட அனுமதித்தவரைப்பற்றி கேள்விப்பட்டிருக்கிறாயா?

இப்பொழுது, சாலமன் (சுலைமான் அலைஹிஸ்ஸலாம்) எறும்புகளின் உரையாடலை "கேட்டதைப்பற்றி" பார்ப்போம் :

சில ஆண்டுகளுக்கு முன், மனிதன், தூரத்திலிருக்கும் மற்றவனுடன் ஒரு கம்பி மூலம் தொடர்பு கொண்டான். வானொலி செய்திகள், நிகழ்சிகள், ஒலிபரப்பப்பட்டு, அவை கம்பியின் தொடர்புடன் மற்ற இடங்களின் பெறப்பட்டன. அடுத்து, கம்பியற்ற சாதனங்களும் ட்ரான்ஸிஸ்டர் எனப்படும் சாதனங்களும் கம்பித்தொடர்பு இல்லாமலேயே இயங்கின. இப்பொழுது செயற்கைத்துணைக்கோள்களும் சில்லுகளும் (Satellites and Chips) நமது சேவை புரிகின்றன. அடுத்து, தொலையுணர்வு, தொலை கட்டுப்பாடு (Remote Sensing and Remote Control) வந்திருக்கிறது. இவையனைத்தும் கடவுளால் படைக்கப்பட்ட தனிமங்களிலிருந்து, மனிதனால் உண்டாக்கப்பட்டவை. நீ உனக்கே சொந்தமான உடனடித்தொலைபேசி (hotline) எண்ணையும் வைத்துக்கொள்ளலாம். அதில் மற்ற யாரும் இடையே தலையிடமுடியாமலும் செய்து கொள்ளலாம்.

இது எல்லாம் இப்படியிருக்கும் பொழுது, தன் தூதர் சாலமனுக்கு (சுலைமான் அலைஹிஸ்ஸலாம்) மட்டும் இறைவன், தொலையுணர்வு கொண்ட ஒரு வினைத்திறத்தால், எறும்புகளின் உரையாடலை அறிந்து கொள்ளும் சக்தி அளித்திருந்தது ஒரு முடியாத காரியமாக இருக்க முடியுமா? அல்லாஹ் தன் தூதருக்கு அதிகாரத்தை அளித்த பொழுது, பிராணிகளின் மற்றும் பறவைகளின் மொழியையும் புரிந்துகொள்ளும் ஆற்றல் அளித்திருந்தான்.

அது சரி, ஒரு கழுதை மனிதனுடன் போசியதை (கழுதையின் மொழியில் இல்லை) நீ நம்புகிறாயா? கழுதை மனித மொழியில் பேசியது. நீ ஒரு கிறிஸ்தவனாக இருந்தால், பைபிலில் எழுதியிருக்கும் இப்பகுதி எந்த முறையில் விஞ்ஞான ரீதியானது, என்பதை விளக்க இயலுமா?

நான் உனக்கு நன்கு விளக்கியிருப்பதாக நம்புகிறேன்.

புன்னகையும், சாந்தியும்...